


# 25.09.2026 செய்திகள்

## ஞானேஷ்குமார் பதவி நீக்கம்

- தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமார் மீது ஒருதலைபட்சமான செயல்பாடு, பாரபட்சமான அணுகுமுறை, அரசு நிர்வாகத்தின் கட்டுப்பாட்டில் செயல்படுதல், பெருமளவிலான வாக்காளர்களின் வாக்குரிமை பறிப்பு, தேர்தல் முறைகேடு குறித்த விசாரணைகளைத் தடுத்தல் உள்ளிட்ட குற்றச்சாட்டுகளை சுமத்தி, அவரை பதவிநீக்கம் செய்வதற்கான தீர்மான நோட்டீஸை நாடாளுமன்ற இரு அவைகளிலும் எதிர்க்கட்சிகளின் இண்டி கூட்டணி முதல்முறையாக கடந்த மார்ச்சில் அளித்தது.

» எஸ்ஐஆர் விவகாரத்தில் புதிய சர்ச்சை

- வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் (எஸ்ஐஆர்) தொடர்பான பல்வேறு முடிவுகளில் தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமாருக்கும். தேர்தல் ஆணையர்கள் சுக்பீர் சிங் சாந்து, விவேக் ஜோஷி ஆகியோருக்கும் இடையே கடும் கருத்து மோதல் ஏற்பட்டுள்ளதாக ஆங்கில நாளிதழ் ஒன்றில் கடந்த புதன்கிழமை செய்தி வெளியானது.
- வாக்காளர்கள் பெயர் மொத்தமாக நீக்கம், படிவம் 6-இல் மொத்தமாக நீக்கம், படிவம் 6-இல் மேற்கொள்ளப்பட்ட மாற்றங்கள், வாக்காளர் தரவு தளங்களை மையப்படுத்துதல் மீதான கட்டுப்பாடு உள்ளிட்ட விஷயங்களில் தேர்தல் ஆணையர்கள் எதிர்ப்பை பதிவு செய்ததாகவும் தங்களுக்குத் தெரியாமல் முடிவுகள் மேற்கொள்ளப்பட்டதாக கடந்த 10 மாதங்களில் குறைந்தபட்சம் 14 முறை அவர்கள் ஆட்சேபம் தெரிவித்ததாகவும் அந்தச் செய்தியில் குறிப்பிடப்பட்டிருந்தது.

» மீண்டும் நோட்டீஸ்?

- சர்வாதிகாரப் போக்குடன் செயல்படும் ஞானேஷ் குமாரை பதவி நீக்குவதுடன், அவரைக் கைது செய்து சிறையில் அடைக்க வேண்டும்.
- அவரது மேற்பார்வையின் நடைபெற்ற பேரவைத் தேர்தல்களை ரத்துசெய்துவிட்டு, மீண்டும் தேர்தல் நடத்த வேண்டும் என்ற கோரிக்கையை எதிர்க்கட்சிகள் வலுவாக எழுப்பி வருகின்றன.